Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9

இதழ் 9

போன் : 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 7 ஜுல்கஃ 8 [19-2-67] ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



# சதிவழக்கு: மேலும் மூவர் விடுதலை

கொழும்பு, சனி

**"1966 பெப்ரவரி 17" புரட்சி சதி வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள எதிரிகளில் மேலும் மூவர் இன்று காலை விடுதலைசெய்யப்பட்டனர். இவர்களுடன் மொத்தம் ஆறு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

குறிப்பிட்ட மூன்று எதிரிகளுக்கும் எதிராக சாட்சியங்கள் இல்லை என்று முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஏ. சி. டி. சொய்சா தெரிவித்திருந்ததைத்தொடர்ந்து சதிவழக்கை விசாரணை செய்துவரும் கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் மூன்று எதிரிகளையும் விடுதலை செய்தார்.

18-வது எதிரி எல். எல். ரூபசிங்கா, 20-வது எதிரி ஈ. எம. விஜயரத்ன, 25-வது எதிரி பி. டி. குணசேகரா ஆகிய மூவருமே இன்று காலையில் விடுதலைசெய்யப்பட்டவர்களாகும.

## வழக்கு

கடந்தவருடம் பெப்ரவரி மாதம் 17-ம் திகதி தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்ததாகவும் மந்திரிகளையும் இடதுசாரித் தலைவர்களையும் கொலைசெய்வதற்கு முயற்சித்ததாகவும் ஞானசீகதேரோ, முன்னள் இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் உடுகம ஆகியோர் உள்ளிட்டு இருபத்தெட்டு எதிராளிகள்மீது குற்றம்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று எதிரிகள் [26, 27, 28] கடந்த பத்தாம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். சாட்சியங்கள் முரண்பாடாகவிருப்ப

[6ம் பக்கம் பார்க்க]

# எந்தக்கட்சிக்கும் தனி ஆட்சி கிடைக்குமா?

—நமது நிருபர் கா. யோகநாதன்—

சென்னை, பெப். 18

தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கும் எதிர்ப்பு அணியினருக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கும் என்பதே இங்கு பேச்சாகஇருக்கிறது. மொத்தம் 237 தொகுதிகளைக்கொண்ட தமிழ்நாட்டு சட்டசபையில் 120 தொகுதிகளில் வெற்றிபெற்றவர்களே அரசாங்கத்தை அமைக்கமுடியும். காங்கிரஸிற்கு நிச்சயம் மெஜோரிட்டி கிடைக்கும் என்று காமராஜர் கூறியுள்ளார். டில்லி மந்திரி சுப்பிரமணியம் காங்கிரஸிற்கு 150 தொகுதிகள் கிடைக்கும் என்று கூறியுள்ளார். தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு சென்னைக்கு வந்துள்ள நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் தமிழ்நாட்டில் எதிர்ப்பு அணி ஆட்சிதான் அமையும் என்று கூறியுள்ளார். தி. மு. க. தலைவர் அன்பழகன், தமிழ்நாட்டில் தி. மு. கழகத்திற்கு 135 ஸ்தானங்கள் கிடைக்கும் என்று இன்று தெரிவித்தார். எதிர்ப்பு அணிஆட்சி ஏற்படுவது உறுதியாகிவிட்டதென ராஜாஜி கூறியுள்ளார். ஆனல் பொதுமக்களோ எந்தக்கட்சிக்கும் தனித்து 120 ஸ்தானங்கள் கிடைக்காது என்றே பேசிக்கொள்கின்றனர். எதிர்ப்பு அணியினரிடம் ஆட்சியைக்கொடுக்க நான் என்னமடையனு: என்று காமராஜர் ஒருகூட்டத்தில் கூறியிருக்கிறர். கேரளாவில் நடந்ததுபோல இங்கே நடக்கவிடமாட்டோம் என எதிர்ப்பு அணியினர் கூறியுள்ளனர். இப்பேச்சுக்கள் எல்லாம் பொதுமக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. தேர்தலின்பின் என்ன நடக்கப் போகிறது? யார் மந்திரி சபை அமைப்பார்கள்? என்பதை அறியக்காத்திருக்கின்றனர்.

காங்கிரஸாரும் தி. மு. க. வினரும் இப்பொழுது புதிய சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். அத்துடன் நேற்று நிமிடத்திற்கு ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுக் கொண்டிருந்தனர். 'கல்வியைத்தந்தவர் காமராஜர்' என்று ஒரு இடத்தில் காங்கிரஸார் சுவரொட்டி எழுதிவைத்திருந்தனர். அருகில் தி. மு. க.வினர் வேறொரு சுவரொட்டி எழுதிவைத்தனர். அதில் 'காமராஜர் கட்டிய பள்ளியில் படித்துதானு அண்ணு எம். ஏ. பட்டம் பெற்ருர்? வெள்ளைக்காரன் காலத்தில் யாரும்படிக்கவில்லையா? பட்டம்பெறவில்லையா.' என்று எழுதப்பட்டிருந்தது. மற்றொரு காங்கிரஸ் சுவரொட்டியில் அணைகள் கட்டினேம், ரோட்டுப்போட்டும். ஆஸ்பத்திரிகள் கட்டினேம். என்று எழுதப்பட்டிருந்தது. அருகில் தி. மு. க. சுவரொட்டியில் வெள்ளைக்காரன் காலத்தில் அணைகள் இல்லையா? ரோட்டு இல்லை? என்று எழுதப்பட்டிருந்தது,

தமிழ்நாட்டில் எதிர்ப்பு அணி நிச்சயம் வெற்றி பெற்று மந்திரிசபை அமைக்

[6-ம் பக்கம் பார்க்க]

மணிப்பூரில்

# தேர்தல் அதிகாரிகள் செய்த தவறு

## வாக்குகள் எண்ணுவது நிறுத்தப்பட்டது

புதுடில்லி, பெப். 18

மணிப்பூர் ராஜ்ய சட்டசபைத் தொகுதிகளுக்காக நடைபெற்ற தேர்தல்களில் வாக்குகளை எண்ணுவதை உடனடியாக நிறுத்துமாறு தேர்தல் கமிஷனர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணுவது 21ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் ராஜ்ய சட்டசபைத் தேர்தலில் நான்கு தொகுதிகளுக்கான முடிவுகள் இன்று காலையில் அறிவிக்கப்பட்டன. வேறு சில தொகுதிகளிலும் வாக்குகள் இன்று எண்ணப்பட்டன.

தேர்தல் கமிஷனர் இன்று பகல்விடுத்துள்ள செய்தியில் வாக்குகள் இம்மாதம் இருபத்தோராம் திகதியிலிருந்தே எண்ணப்பட வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டிருந்ததென்றும் மணிப்பூரில் தேர்தல் அதிகாரிகள் தவறுதலாக வாக்குகளை எண்ணிவிட்டனர் என்றும் முடிவுகளும் அறிவிக்கப்பட்டுவிட்டதென்றும் தெரிவித்துள்ளார்.

வாக்குகள் எண்ணுவது 21ந் திகதிவரை ஒத்துவைக்கப்பட்டுள்ளது.

[விபரம் 3-ம் பக்கம்]

## யுதாண்ட் இலங்கை விஜயம்



கொழும்பு, சனி

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைக் காரியதரிசி யுதாண்ட் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம்செய்வார். இலங்கையில் அவர் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்.

யுதாண்டின் இலங்கை விஜயத்துக்கான திகதி இன்னும் நிச்சயப்படுத்தப்படவில்லை [illegible] பிற்பகுதியில் இங்கு வரலாம் எனத் தெரியவருகிறது.

கொழுமபுக் கல்லூரிகளில்

# கலைப்பட்டதாரிகள் புதிய நியமனம் இல்லை

கொழும்பு, சனி

கொழும்பு மாவட்டத்திலுள்ள கல்லூரிகளில் கலைப்பட்டதாரிகளை புதிதாக நியமிக்க வேண்டாமென்று கல்வி டைரக்டர் ஜெனரல் அறிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து கல்லூரிகளில் மேலதிகமாகவுள்ள கலைப்பட்டதாரிகள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படலாமெனத்தெரியவருகிறது.

பாணந்துறை, நீர்கொழும்பு, அவிசாவளை ஆகியஇடங்களிலுள்ள கல்லூரிகளில் மேலதிகமாக கலைப்பட்டதாரிகள் ஆசிரியர்கள் உள்ளனர் என்றும், ஆனல் மாகாணப்பாடசாலைகளில் இந்த ஆசிரியர்கள் குறைவாகவுள்ளனர் என்றும் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே கல்வி டைரக்டர் ஜெனரல் புதிய உத்தரவை விடுத்துள்ளார்.

கடற்தொழிலாளருக்கு

# நன்கொடைப்பணம் அடுத்தமாதத்தில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடற்தொழிலாளர்களுக்கு 1966-ம், 67-ம் ஆண்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட நன்கொடைப்பணம் அதிகமாக இந்த வருடம் மார்ச் மாதம் முடிவதற்குள் கிடைக்குமென அறியப்படுகிறது. இந்த நன்கொடையைக்கொண்டு 15 கடல் வீதிகளை அமைப்பதென்ற தீர்மானம் நேற்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற மீன்பிடி சமாஜங்களின் மகாநாட்டில் விசேஷமாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. ஏ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடமாகாண கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் தலைவர் திரு. ஸ்ரனிஸ் ரோஸ், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், அரசினர் கடற்ருெழில் பிரதிநிதி திரு. தங்கராஜா ஆகியோர் விசேஷமாகக் கலந்துகொண்டனர்.

ஒதுக்கப்பட்ட நன்கொடைப்பணம் வந்ததும் அவ்வப்பகுதிமீனவர்களுக்கு கிராமசபைகள் மூலம் கேள்வி விளம்பரங்கள் விடுத்து இவ் வருடம் நவம்பர் மாதத்திற்கு முதல் இக்கடல் பாதை வேலைகளைப் பூர்த்தியாக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

20 குதிரைவேக என்ஜின்கள், கட்டுமரங்கள், வள்ளங்கள் விநியோகங்கள் பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. [ந. நி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

துன்பங்கள் நமதுமுன்னேற்றத்துக்காகவும் வளர்ச்சிக்காகவுமே இறைவனால் அளிக்கப்பட்டவையென்று ஏற்க வேண்டும். நாம் இந்த உடம்பல்ல. உடலின் மீது பற்றை வைக்கப்படாது. அவ்விதபற்றின் காரணமாகவே பலதுன்பங்களும் நம்மை பாதிக்கின்றன.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 38 .

யாழ்ப்பாணம் பராபவ ஆடு மாசி மீ 7 (19-2-67)

## நவசீனத்தில்

நவசீனாவில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள முடியாதபடி சீனாவிலிருந்துகிடைக்கும் செய்திகளும் சீனாவைப்பற்றி ;சீனாவுக்கு வெளியே இருந்துகிடைக்கும் செய்திகளும் ஒரே குழப்பமாக இருக்கிறது. செய்திகளைப் போலவே சீனாவிலும் குழப்பமான நிலைமை உள்ளதென்பதைப் புரிந்து கொள்வது கஷ்டமல்ல.

'கலாச்சாரப் புரட்சி'யை ஏற்படுத்த 'செங்காவலர்இயக்கம்' ஒன்றை நவசீனத் தலைவர் மா—ஸே—துங்ஆரம்பித்தார். சீனாவில் தமக்கெதிராகச் சிலர் கிளம்பியதும் அவர்களை ஒழித்துக்கட்டி தலைமைப்பதவிப் போராட்டத்தையே முடிவுகட்டி விடவே மா—ஸே—துங் 'செங்காவலர் இயக்கத்தை' ஆரம்பித்தாரென்றும் 'கலாச்சாரப் புரட்சி' என்பது 'கம்யூனிஸ்ட்' தலைமைப்பீடக்களையெடுப்புத் தானென்றும் கருதப்பட்டது. இது இன்று ஊர்ஜிதமாகி வருகிறது. தலைமைப்பீடத்தில் களையெடுப்பு நடவடிக்கை ஆரம்பமானதைத்தொடர்ந்து மா—ஸே—துங்கிற்கு உள்நாட்டில் எதிர்ப்பு வளர்ந்துள்ளது. மா-வின் வாரிஸாகக் கருதப்பட்ட சீன அதிபர் லியூ-ஷா-சி மட்டுமல்ல சீன கம்யூனிஸ்ட் காரியதரிசியும் எதிர்ப்பாளராக மாறியுள்ளார். இவர்களை கம்யூனிஸ்ட் கட்சி பதவி நீக்கம் செய்துள்ளது. ஆனால் லியூ-ஷா-சியுடன் மற்றும் சீனாவின் மாகாணங்கள் பலவற்றிலுள்ள ராணுவ ஜெனரல்களும் மா—ஸே—துங்கை எதிர்த்து நிற்கின்றனர். இதன் விளைவாக சீனாவின் முக்கிய மாகாணங்கள் இப்பொழுது மா-வின் எதிர்ப்பாளர்வசம் உள்ளனவாம். விவசாயம், தொழில்உற்பத்திகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

சீனத்தலைவர்களின் 'அகலக்கால்' வைக்கும் கொள்கை படிப்படியாகத் தோல்வியடைந்து இந்தோனேஷியாவில் படுதோல்வியில் முடிவடைந்ததுதான் சீனாவின் இன்றைய குழப்பநிலைக்கு முழுக்காரணம் என்று சொல்லலாம். மா-ஸே-துங்கினதும் அவரது புதிய 'வாரிசான' பாதுகாப்புமந்திரியான லின்-பியாவினதும் நடவடிக்கைகள் இப்பொழுது சோவியத் யூனியனதும் இதர கம்யூனிஸ்ட் நாடுகளினதும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளன. சீனாவின் இன்றைய குழப்பநிலை மேலும்சிலகாலம் நீடிக்குமானாலும் மா-ஸே-துங் தலைமைக்கு ஆபத்து வருமென்று எதிர்பார்க்கமுடியாது. ஆயினும்சீன மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பி உள்நாட்டின் குழப்ப நிலைமையைச் சமாளிக்க அண்டை நாடு ஒன்றுடன் கைகலப்பு ஒன்றில் சீனா ஈடுபட நேரிடக்கூடும்.

சீனாவின் இன்றைய குழப்பநிலைபற்றியசெய்திகள் இலங்கைக்குமகிழ்ச்சியளிக்க முடியாது. இலங்கையில் அரிசி நெருக்கடி ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் நமது ரப்பரைகூடிய விலைக்குவாங்கவும் நமக்கு அரிசி தரவும் ஒப்புக்கொண்டுள்ள ஒரே நாடு சீனாதான். அங்குஅமைதி நிலவி உற்பத்தி அதிகரித்தால்தான் நமக்கு அரிசி உணவுகிடைக்கும். நமக்கு அரிசி கிடைப்பதற்காகத்தான் சீனாவில் அமைதி நிலவவேண்டுமென நாம் விரும்பவில்லை. அப்படி விரும்புவது அப்பட்டமான சுயநலமே. நமக்கு அரிசி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் சீனாவில் அமைதி நிலவ வேண்டியது அவசியம். சீனாபரப்பளவிலும் ஜனத்தொகையிலுமுலகிலேயே முதலிடம் வகிக்கும்நாடு. ஆசியாவில் அதுஒருவல்லரசாகவும் திகழ்கிறது. அங்கு அமைதி நிலவினால்தான் ஆசியாவிலும் உலகிலும் அமைதியேற்பட முடியும். இன்றைய குழப்பநிலை நீங்கி அமைதி ஏற்பட்டு, அந்த அமைதி நிரந்தரசமாதானத்துக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கவேண்டுமாயின் சீனத்தலைவர்கள் தங்கள் கொள்கையிலும் போக்கிலும் மாற்றம் செய்து கொள்ள வேண்டியிருக்கும்.

# இந்திய ஜனநாயகப்பண்பின் சிறப்புமிக் அம்சங்கள்

## உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் பொதுத் தேர்தல்

**—எஸ். சிவசுப்பிரமணியம்—**

இந்திய பொதுத் தேர்தல் இயற்கையாகவே இலங்கை மக்களின் சகல பகுதியினரிடையேயும் அதிக அக்கறையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே உணரப்பட்டும், வெளியிடப்பட்டிருப்பதும் போல், இந்திய தேர்தல்களின் சம்பவப் போக்கும், இறுதி முடிவுகளும் எமது மக்களின் அரசியல் சித்தாந்தத்தையும், தேசிய விவகாரங்களையும் பாதிக்கும். பொதுத் தேர்தலின் முடிவுகளை, கட்சிகளின் வெற்றிதோல்வி பற்றிய கண்ணோட்டத்துடன் குறிப்பிடாது, இந்தியாவின் ஜனநாயகம் இயங்கும்முறையின் சில முக்கிய அம்சங்களை இலங்கை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவது விரும்பத்தக்கதாகும். ஐம்பது கோடி மக்கள் தொகையைக் கொண்டதும், உலகத்திலேயே அதிக வாக்காளர் தொகையான 25 கோடி வாக்காளர்களைக் கொண்டதுமான பெரிய தேசமான இந்தியாவில், ஒரு சில சம்பவங்கள் நடப்பதைக் கொண்டு, சோர்வான மனப்பான்மை கொள்ளுதல் தேவையற்றதாகும். அங்குள்ள நிலைமை பற்றிய சமநிலைக் கருத்தை தெளிவான சிந்தையும், நியாயமான மனமும் கொண்ட ஒருவெளிநாட்டுப் பார்வையாளர், முன்னாள் அல்ட்ரிஞ்சம் பிரபுவான திரு. ஜோன் ஈ. பி. கிரிக் என்பவர், வெளியிட்டுள்ளார். 'சென்னை இந்து'வில் பெப். 12-ம் திகதி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில், அவரது கருத்துகள்தரப்பட்டுள்ளன.

"திரு ஜோன் ஈ. பி. கிரிக் [முன்னாள் பிரபு அல்ட்ரிஞ்சம்] இந்திய ஜனநாயகத்தின் உயிர்ச் சக்தி தம்மைக்கவர்ந்துள்ளதாக நேற்று இங்கு குறிப்பிட்டார். அதே நேரத்தில், உலகில் எந்த ஜனநாயகமும் நிறைவானதாகாது என்றும் அவர் கூறினார். இந்தியாவில் இப்போது தான் மூன்று வார சுற்றுப்பிரயாணத்தை முடித்துள்ள திரு. கிரிக், 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரை பற்றிக் குறிப்பிட்டுப் போலும், "இந்திய ஜனநாயகத்தைப் பொறுத்த வரை, தற்போதைய தேர்தல் இந்தியாவின் கடைசித் தேர்தல் என்று கூறுவதை விட, இன்று வரை ஒரு கட்சியும் ஒரு தனி மனிதரும் [ஜவஹர்லால் நேரு] மிகுந்த சக்தி செலுத்தி வந்த காரணத்தால், அரசியற் சாசனத்தின் உண்மையான இயக்கம் பாதிக்கப்பட்டு வந்தமையால், இதுவே உண்மையில் முதலாவது தேர்தல் என்று குறிப்பிடுவது பொருத்தமாகும் என நான் துணிவுடன் கூறுவேன்."

இந்திய தேர்தல் கூட்டங்களில் நடைபெறும் பலாத்காரம் பற்றிக்குறிப்பிடுகையில், இவை அந்த நாட்டுக்கு மட்டும் உரியவை அல்ல என திரு. கிரிக் கூறினார். இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கூடப்பலாத்காரம் நடைபெற்றுள்ளது.

கடந்த இரு பொதுத் தேர்தல்களிலும், இங்கிலாந்தில், பிரதம மந்திரி திரு. வில்சனுக்கும், அவருக்கு முன் பதவியிலிருந்த சேர் அலெக் டொக்லாஸ் ஹோமுக்கும் மோசமான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது என அவர் மேலும் கூறினார். கடந்த இங்கிலாந்துப் பொதுத் தேர்தலில், யாரோ திரு. வில்சனின் முகத்தில் காறித் துப்பியதாகவும், சேர் அலெக்கை சத்தம் போட்டுப் பேசவிடாது சிலர் தடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். "அத்துடன் அமெரிக்காவில், இரு வருடங்களுக்கு முன் கல்லோ அல்லது தக்காளிப்பழக் குண்டோ ஒன்றினை விடப்பலமான ஒரு பொருளினால் ஜனாதிபதி ஒருவர் தாக்கப்பட்டார்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். இந்திய தேர்தல் பிரச்சாரத்தின் ஒழுங்கு முறை தம்மை ஈர்த்துள்ளதாகவும் அவர் கூறினா .

திருமதி இந்திரா காந்தியின் நிலை பற்றி, மதிப்புக்குரியவரும், காங்கிரஸ் கட்சியின் குறிப்பிடத்தக்க எதிர்ப்பாளருமான திரு. ராஜகோபாலாச்சாரியார் வெளியிட்டுள்ள கருத்து சிந்திக்கற்பாலதாகும். [illegible] ஒரு மேடையில் பேசும்போது, திருமதி இந்திராவை இந்தியாவின் அடுத்த பிரதமராக ஏற்றுக் கொள்ளத்தான் தயாராக விருப்பதாகத் திரு. ராஜாஜி கூறியிருந்தார், தனக்கு எதிரான அரசியல் கட்சித் தலைவர் ஒருவர் பற்றி மற்றுமோர் அரசியல் தலைவர் இவ்விதம் கருத்து வெளியிடுவது, ஜனநாயக சரித்திரத்தில் உன்னதமானதும், இதுவரை கேள்விப்படாததுமாகும். இவ்வித பரந்த மனப்பான்மையையும், நல்லெண்ணத்தையும் எதிர்க் கட்சிப் பிரமுகர் ஒருவருக்குக்காட்டுவது, இந்தியாவிலும், அகில உலகத்திலும் ஜனநாயகத்துக்கும், நல்ல அரசாங்கத்துக்கும் சிறந்த எதிர்காலத்தைச் சுட்டுவதுடன், சம்பந்தப்பட்ட இரு தலைவர்களினது நற்பெயருக்கும், இந்திய தலைமையின் உயர்ந்த தன்மைக்கும் பாரட்டாகவும் விளங்குகிறது.

பிரதமர்இந்திராகாந்திமீது கல்வீசப்பட்ட விஷயத்தில், அவரை மூக்கிலடித்த கல், அவருக்காக எறியப்பட்டதா என்பது சந்தேகத்துக்குரியதே. திருமதி இந்திராவுக்கு மக்களிடையே இருக்கும் நன்மதிப்பும், அன்பும், ஆதரவும், அந்தக்கல் அவருக்காகவல்ல, வேறு யாருக்கோ என எறியப்பட்டதென்றே புலனாகின்றது ஆனாலும், அவர் அக்கல்லைத் தனக்கே இயல்பான கௌரவத்துடனும், துணிவுடனும் ஏற்றுக் கொண்டார். ஜவஹர்லால், கமலா நேரு ஆகியோரது மகளும், நேரு குடும்பத்தின் கொழுந்துமான அவரிடமிருந்து வேறெதையும் எதிர் பார்க்கமுடியாது. சிலநாட்களுக்குமுன், நாற்பது வருடங்களுக்குமுன் திருமதி சரோஜினிநாயுடு, ஜவஹர்லால் நேருவுக்கு வரைந்த கடிதமொன்றை இந்தியப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. அதில் ஒரு பகுதி பின்வருமாறு:

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

"எதிர்நீச்சல்" என்ற நாடகத்தை சென்னையில் அண்ணாமலை மன்றத்தில் பார்த்தேன். பல மாதங்களாக அந்நாடகம் நடந்தும் கூட்டம் மண்டபம் நிறைய இருந்தது. நகைச்சுவை மிக்க சமூகக் கதை. ஒரே ஒரு காட்சிதான். ஒரு பழைய மச்சுவீடு. சுவருகளில் பல விரிசல்கள். மச்சிலும் கீழுமாக ஆறு குடிகள் இருக்கின்றன. "மாது முட்டாள்" என்று கரியால் சுவரில் கிறுக்கியுள்ளது. திருச்சியிலே "மாது" என்று பல ஆண்களின் செல்லப் பெயராகும். அங்கு கோயில் கொண்டுள்ள "மாதுர் பூதேசுவரர்" [தாயுமானவர்] என்ற பெயரின் சுருக்கமே இது.

அந்த வீட்டின் மச்சுப் படிக்குக் கீழேயுள்ள ஓர் ஒதுக்கிடத்தில் "மாது" எனும் ஏழைப் பையன் வசித்து, அந்த ஆறு குடும்பங்களும் சொல்லும் வேலைகளைச் செய்துகொண்டு படித்தும் வருகின்றான். மாதுவாக வருவதுநாகேஷ். எவ்வித 'மேக்கப்'பும் இல்லாமல் இயற்கையாக நடித்து மனதைக் கவர்ந்துவிடுகிறார். சௌகார் ஜானகி, பட்டு மாமியாக நடித்து நாடகத்துக்கே அழகு கொடுப்பதுடன், சபையோரை குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கிறார். இதில் வரும் பாத்திரங்கள் எல்லாரும் சினிமாப் புகழ் பெற்றவர்கள். மாதுவுக்குப் பலபல தீங்குகள் செய்யப்பட்டும் அவற்றிலிருந்தெல்லாம் அவனது நல்ல குணமே மீளவைக்கின்றது. மூன்று லட்ச ரூபாய் அவனுக்கு திடீரென ஆஸ்தி வந்துவிட்டதாக ஒரு கதை பரவியதும், அவன் மதிப்பு திடீரென உயர்ந்துவிடுகிறது. ஊரே எப்படி அவனுக்கு உபசாரங்கள் செய்கின்றது! அது வெறும் கதை என்று தெரிந்தபின், திடீரென எல்லாரும் மாறிவிடுகிறார்கள்!

நல்ல படிப்பினைகள் உள்ள இந்த சமூகசீர்திருந்த நாடகம், சென்னையில் பெரும் வெற்றிபெற்றுள்ளது. பேப்பரில் விமர்சனங்களைப் படித்த, தஞ்சாவூர் முதலிய தூர இடங்களிலுள்ள வாலிபர்கள் இதைப்பார்க்க எவ்வளவு ஆவல்கொண்டுள்ளனர்! நகைச்சுவை மூலம் சமூக சீர்திருத்தம் செய்யும் இந்த நாடகத்தை இலங்கையிலும் நடிக்க இங்குள்ள ஏதாவது நாடகமன்றம் முன்வருவது நல்லது. 'ஆராமுது அசடா?' என்ற நாடகத்தில் ஆராமுதாக நடித்தவர். 'மாது'வாக நன்கு நடிக்கலாம். இங்கு நடிப்புத் திறனுக்குக் குறைவில்லை. ஆனால் 'பட்டு மாமி' பாகம் ஏற்க ஆள் கிடைப்பதுதான் கஷ்டம்!

* * *

நாடகம் முடிந்து திரும்புகையில் இரவிலே டாக்ஸி கிடைப்பது கஷ்டமாக இருந்தது. ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளிடம் இதைப் பற்றிக் கூறியதும், அவர் சற்று தூரம் ஓடிச்சென்று ஒரு டாக்ஸியை நிறுத்தி, அதில் ஏற்றிவைத்தார். சென்னையில் இரவிலே டாக்ஸியில் பயமின்றி ஏறலாமா என்று விசாரித்தபோது, அவர் "நீங்கள் ஊருக்குப் புதிதா" என்று கேட்டார். சென்னையிலே இப்போது அந்தப் பேச்சே கிடையாதென்றும்பொலிஸ் அதிபர் அருள் அவர்களின் நிர்வாகத்தில், இரவில் நகரெங்கும் பயமில்லாமல் யாரும் செல்லலாமென்றும் அந்தப் பொலிஸ்காரர் தெரிவித்தார்.

டாக்ஸிக்காரர்மீது சற்று சந்தேகம் ஏற்பட்டாலும் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுப்பதாகவும் இரவிலும் நிர்ப்பயமாக எந்த டாக்ஸியிலும் செல்லலாமென்றும் கூறினார் அவர். இங்கு கொழும்பிலே பகலில்கூட சில டாக்ஸிகளில் ஏறுவது பத்திரமின்றியுள்ளது நினைப்புவந்தது. நமது பொலிஸ் அதிகாரிகள் சென்னை சென்று, பார்த்து இங்கும் அவ்வித நடவடிக்கை எடுப்பது பொதுமக்களுக்கு எவ்வளவோ உபகாரமாக இருக்குமல்லவா?

* *

ஒட்டி ஆட்கொண்டு போயொளித்திட்ட உச்சிப்போதனை நச்சரவார்த்த, பட்டியைப் பகலையிருள் தன்னைப், பாலிப்பார் மனத்தூறும் அத்தேனைக், கட்டியைக் கரும்பின் தெளிதன்னைக், காதலாற் கடற்சூர் தடிந்திட்ட, செட்டி அப்ப

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிப்பூர் சட்டசபைதேர்தல்: 4 தொகுதிகளின் முடிவுகள் வெளியானது

## தமிழ்நாட்டில் வாக்குகள் 1 நாள் முன்னதாக எண்ணப்படும்

புதுடில்லி,பெப்.18

கடந்த பதினைந்தாம் திகதி நடைபெற்ற மணிப்பூர் ராஜ்ய சட்டசபைத் தொகுதிகளுக்கான தேர்தலின் சில முடிவுகள் இன்று காலையில் அறிவிக்கப்பட்டன. இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் படி மணிப்பூர் தேர்தல்களில் இரண்டு சுயேச்சையாளர்களும், ஒரு காங்கிரஸ் அபேட்சகரும்,ஒரு சம்யுக்த சோஷலிஸ்ட் அபேட்சகரும், வெற்றிபெற்றுள்ளனர். இன்று சனிக்கிழமை நான்கு தொகுதிகளில் வாக்குகள் எண்ணப்பட்டன.

இந்தியாவின் நான்காவது பொதுந்தேர்தலின் முதலாவது முடிவுகளாக மணிப்பூர் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. மத்தியஅரசாங்கத்தின் கீழுள்ள மணிப்பூர் ராஜ்ய சட்டசபை முப்பது உறுப்பினர்களைக் கொண்டது. இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி இரண்டு சுயேச்சையாளர்களும், காங்கிரஸ்கட்சி அபேட்சகர் ஒருவரும் சம்யுக்த சோஷலிஸ்ட்அபேட்சகர் ஒருவரும் வெற்றிபெற்றுள்ளனர்.சுயேச்சையாக வெற்றிபெற்றுள்ள திரு. வீரமங்கல் என்பவர் 320 அதிகப்படியான வாக்குகளால் காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்துள்ளார். சம்யுக்த சோஷலிஸ்ட் அபேட்சகர் திரு.சர்மா 772 அதிகப்படியான வாக்குகளால் காங்கிரஸ் அபேட்சகரைத்தோற்கடித்து மீண்டும் சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். காங்கிரஸ் அபேட்சகரும் திரு.சர்மாவும் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### நேற்றைய வாக்களிப்பு விபரம்

இன்று தமிழ்நாடு, ஆந்திரா பிரதேசம் உள்ளிட்டு ஆறு ராஜ்யங்களில் இரண்டாவது சுற்று வாக்களிப்பு நடைபெற்றது. சுமார் இரண்டுகோடியே எண்பது லட்சம் பேர் வாக்களித்திருப்பார்களென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றுடன் நாட்டின் மொத்த வாக்காளர்களில் நாற்பதுசத விகிதத்தினர் வாக்களித்திருப்பார்களென்று அறிவிக்கப்பட்டது. அந்தமான், லட்சத்தீவுகளில் இன்று முதற்தடவையாகத் தேர்தல் நடைபெற்றது. லட்சத்தீவுகளில் அரசியல்கட்சி எதுவும் தேர்தலில் போட்டியிடவில்லை. ஒரு லோகசபை ஸ்தானத்துக்கு ஐந்து சுயேச்சையாளர் போட்டியிட்டனர்.

### தமிழ் நாட்டில்

தமிழ்நாட்டில் இன்று இரண்டாவது சுற்று வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது. இன்றைய தேர்தலில், 13 லோகசபை ஸ்தானங்களுக்கு 43 அபேட்சகர்களும் 78 சட்டசபைத் தொகுதிகளுக்கு 262 அபேட்சகர்களும போட்டியிட்டனர். இவர்களில் ஐவர் பெண்கள். தமிழ்நாட்டில் இன்று சுமார் 71 லட்சம் பேர் வாக்களித்திருப்பார்களென்று மதிப்பிடப்பட்டது. மந்திரிகளான திரு. மன்ருடியார், திரு. கக்கன் ஆகியோரின்தொகுதிகளில் வாக்களிப்புசுறுசுறுப்பாகநடைபெற்றது.

தமிழ்நாட்டில் வாக்குகள் 22ந் திகதி எண்ணப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டமுடிவில் ஒருமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தேர்தல முடிவடையும் தினமே [21-ந் திகதி] வாக்குகள் எண்ணத்தொடங்கப்படும் என்று தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்,

திரிபுராவில் இரண்டு லோகசபை ஸ்தானங்களுக்கும் 38 சட்டசபை ஸ்தானங்களுக்கும் இன்று வாக்களிப்பு நடைபெற்றது.

### சிறு சிறு சம்பவங்கள்

நாட்டின் பல பகுதிகளிலும் தேர்தல்கள் அமைதியாக நடைபெற்ற போதிலும் சிறு சிறு சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

- பீஹாரில் ஓர் இடத்தில் இரண்டு கட்சி ஆதரவாளர்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 19பேர் காயமடைந்தனர். ஓர் இடத்தில் ஒரு குடிசை தீக்கிரையானது.
- மைசூரில் ஓர் இடத்தில் நிகழ்ந்ததேர்தல் கலவர சம்பவத்தைத் தொடர்ந்து இம்மாதம் 25ந் திகதிவரை கூட்டங்கள்,ஊர்வலங்கள் ஆகியவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சினிமா தியேட்டர்கள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டுள்ளன.
- குஜராத் கிராமமொன்றில் திருமணமான மூன்று மாப்பிள்ளைகள் தாலி கட்டியதும் மற்றையச் சடங்குகளை நிறுத்திவைத்து விட்டு திருமணக் கோலத்திலேயே வாக்களிப்பு நிலையத்துக்கு வந்து வாக்களித்தனர்.
- மதுரையில் கரூர் லோகசபைத் தொகுதியிலுள்ள வேடசத்தூர் சட்டசபைத் தொகுதியில் வாக்களிக்கச் சென்ற ஒரு பெண், யாருக்கு தாம் வாக்களிக்க வேண்டுமென்பதை தேர்தல் அதிகாரியிடமே கேட்டாளாம். ''எந்தச்சின்னத்தின் மீது முத்திரை யிடுவது'' என்று அப்பெண் கேட்டபொழுது, தேர்தல் அதிகாரி தெரிவிக்க மறுத்து ''அதனை நீங்கள்தான் தெரிவு செய்யவேண்டும்'' என்ருராம். அப்பொழுது அந்தப் பெண், ''அதைச் சொன்னுல் எதுவும் குறைந்து போய்விடுமோ...'' என்று கூறி முகத்தைச் சுழித்துக்கொண்டாளாம்.
- சென்னையில் ஆள்மாருட்டம் செய்யமுயன்றதாக 5 பெண்கள் உட்பட 22 பேர் கைது செய்யப்பட்டனர். பெண்கள் உட்பட 14 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- உத்தரப்பிரதேசத்தில் ஸிரோஹி மாவட்டத்தில் பழங்குடியைச் சேர்ந்த ஒரு குடும்பம் வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்றிருந்தது. இக்குடும்பத்தில் குழந்தைகள், பெரியோர் எல்லோரும் அடங்கியிருந்தனர். வாக்களிப்பு நிலையத்துக்குள் நுழைந்து அங்குள்ள தேர்தல் அதிகாரிகளிடம், ''குழந்தைகள் உட்பட எல்லோரையும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.'' என்று அக்குடும்பத்தினர் நிபந்தனை விதித்தனர். தேர்தல் அதிகாரிகளினுல் அவர்களைச் சமாளிப்பதே பெரிய பாடாகிவிட்டதாம்.
- உல்ஹாஸ் நகரிலுள்ள வாக்களிப்பு நிலையமொன்றில் முதலில் வாக்களித்தவர் ஒரு குருட்டுப் பெண்தான். வாக்களிப்பில் 17 குருடர்களுக்கு இப்பெண் உதவவேண்டியிருந்தது. இவர்களில் ஆள்மாருட்டம் செய்ததாக இரண்டு குருடர்கள் நிறுத்திவைக்கப்பட்டனர்.
- சென்னை தியாகராயநகரில் குடியிருக்கும் திரைப்பட நடிகை திருமதி சாவித்திரி கணேசன் பாலமந்திரிலிலுள்ள வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களித்தார். சாவித்திரியுடன் அவரது தாயாரும் 106 வயதுள்ள பாட்டியும் வாக்களித்தனர்.
- சென்னை நகரில் மொத்தம் 50 குருடர்கள் வாக்களித்தனர்.

# ''சீன-ரஷ்ய உறவு முறியலாம்''

### சென் — யீ எச்சரிக்கை

ஹாங்கொங், பெப்.18

சீன-ரஷ்ய உறவுகள் விரைவில் முறிந்துவிடலாம் என்று சீனவெளிநாட்டு மந்திரி மார்ஷல் சென்-யீ தெரிவித்திருப்பதாக இங்கு செய்தி கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் பீகிங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் மார்ஷல் சென்-யீ மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்திருந்ததாக ஜப்பானிய நிருபர் அனுப்பிய செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சீன இராணுவ உயர் அதிகாரி நியு ஜுங்-சென், சீன எல்லைப் படைகளுக்கு உஷாராக விருக்குமாறு உத்தரவிட்டுள்ளார். ரஷ்ய-சீன எல்லையில் ரஷ்யத் துருப்புகளின் மோதலை சமாளிக்க தயாராகுமாறு தமது உத்தரவில் அவர் தெரிவித்துள்ளார்.

# தேசீயவாதிகள் 200பேர் பலி

ஏடன், பெப். 18

ஏடனில் பிரிட்டிஷ் துருப்புகள் 200 தேசிய வாதிகளை சுட்டுக்கொலை செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ்துருப்புகளுக்கும் தேசிய வாதிகளுக்குமிடையேநிகழ்ந்த கைகலப்புகளில் 1,200 தேசிய வாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் அண்மையில் ஏற்பட்ட கைகலப்பில் 20 தேசிய வாதிகளும் அதே தொகை பிரிட்டிஷ் துருப்புகளும் கொல்லப்பட்டனராம் குழப்பநிலை இங்கு நீடிப்பதாக அறிவிக்கப்பட்டது.

# எம். ஜி. ஆரின் தேர்தல் ஏஜெண்டுகளைக் காணவில்லை

## அவரின் 5 வாகனங்கள் நொறுக்கப்பட்டனவாம்

—நமது நிருபர் கா. யோகநாதன்—

சென்னை, பெப். 8

பறங்கிமலைத் தொகுதியில் நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனின் தேர்தல் ஏஜெண்டுகளாக விருந்த மூவரை இரண்டு நாட்களாகக் காணவில்லை. என்று புகார் செய்யப்பட்டுள்ளது. எம். ஜி. ஆருக்குச் சொந்தமான அவர்கள் சென்ற ஜீப்புகள் பாலவாக்கம் என்ற கிராமத்திலுள்ள ஒரு குளத்தில் பொலிஸாரால் சிதைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கணேசன் என்பவர் ஜீப்பை ஓட்டிச்சென்ருர். இவருடன் காரில் சென்ற கோபுராஜ், சின்னயூரை செட்டியார் ஆகியோர்களைத்தான் காணவில்லையென பொலிஸில் புகார் செய்யட்பட்டுள்ளது. சைதாப்பேட்டை தி. மு. க. செயலாளர் திரு. சி. ராமலிங்கம் திருவான்பியூர் பொலிஸில் இந்தப் புகாரைச் செய்துள்ளார்.

நடிகர் எம். ஜி. ஆரின் நான்காவது ஜீப்காரொன்று நேற்று முன்தினமிரவு தீ வைக்கப்பட்டது. ஜீப்காரின் டயர்களும், ஆசனங்களும் எரிந்து சாம்பராயின. இதுவரை இதுசம்பந்தமாக எவரும் கைதாகவில்லை. எல்லாமாக எம். ஜி. ஆருக்குச் சொந்தமான 5 வாகனங்கள் நொறுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நொறுக்கப்பட்ட கார்களில் காயங்களுக்குள்ளான இரு சாரதிகள் உட்பட எட்டுப்பேர் எம். ஜி. ஆர். சிகிச்சை பெறும் பெரியாஸ்பத்திரியிலேயே சிகிச்சை பெறுகின்றனர். இவர்கள்நிலைகுறித்து எம். ஜி. ஆர். மிகவும் கவலை அடைந்துள்ளார்.

# நேதாஜியின் வாள் இந்தியாவிடம் ஒப்படைப்பு

டோக்கியோ. பெப். 18

நேதாஜி சுபாஸ் சந்திர போஸின் வாள்ஒன்றை இந்திய அரசாங்கத்திடம் ஜப்பான்அரசாங்கம்ஒப்படைத்துள்ளது. டோக்கியோவிலுள்ள இந்தியத் தூதரிடம் இந்தவாள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது,

1943ல்நேதாஜி ஜப்பானுக்குச் சென்றிருந்த பொழுது ஒருவர், இந்த வாளை அவருக்கு அன்பளித்திருந்தார். இந்தவாள் அடுத்தமாதம் இந்தியாவுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு நினைவு மியூஸியத்தில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 12 வருடம் சிறை

லண்டன், பெப். 18

தென்னுபிரிக்க தூதரகத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியைக் கத்தியால் குத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு இன்று இங்குள்ள நீதிமன்றம் ஒன்றினுல் 12 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

- சென்னையில் தி. மு. கழகத் தலைவர் திரு. மு. கருணுநிதி சென்றகாரை காங்கிரஸார் பின் தொடர்ந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் ஐவர் காயமடைந்தனர் என்றும் இது சம்பந்தமாக 11 பேர் கைது செய்யப்பட்டனர்என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். ஜி. ஆர். உயிர் பிழைத்தது அதிசயம்

## டாக்டர் விளக்கம்

—நமது நிருபர் கா. யோகநாதன்—

சென்னை, பெப். 18

எம். ஜி. ராமச்சந்திரன் உயிர் பிழைத்தது அதிசயத்திலும் அதிசயமென்றும், குண்டு இன்னும் கொஞ்சம் பக்கவாட்டில் சென்றிருந்தால் மூளைக்குச் செல்லும் பெரிய ரத்தக் குழாய் வெடித்திருக்குமென்றும், அதனுல் மரணம் ஏற்பட்டிருக்குமென்றும் டாக்டர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு புதிய பயிற்சி சிகிச்சை அளிக்கப்படுகிறது. தினமும் ஒருமணி நேரம் கழுத்தை நாலாபுறமும் அசைத்துப் பழகுகிறுர். காலையில் 30 நிமிடமும், மாலையில் 30 நிமிடமும் அவர் டாக்டர்கள் முன்னிலையில் கழுத்தைஅசைத்து பழகுகிறுர். அத்துடன் ஏற்கனவே வெளிவந்த சில படங்களில் நடித்ததுபோல நடித்துப் பார்க்கிறுர். சில வாரங்கள் சென்றபின், வாள்சண்டை, கைச்சண்டை போட்டுப் பழகுவார். மீண்டும் சினிமாவில் நடிப்பதற்காகவே இப்பயிற்சிகள் நடைபெறுகின்றனவாம்.

தி. மு. க. தலைவர் மதியழகன், ஆஸ்பத்திரிக்கு வந்து ராமச்சந்திரனைப் பார்த்தார். மதியழகனிடம் தேர்தல் நிலைமை பற்றி ராமச்சந்திரன் கேட்டார். தி. மு. க. ஆட்சி நிச்சயம் ஏற்படுமென்று மதியழகன் தெரிவித்தார். காயம் முற்ருக ஆறிவிட்டதென்றும் அடுத்த வாரம் கழுத்துக் கட்டு அவிழ்க்கப்படுமென்றும் டாக்டர் கூறினுர்.

டாக்டர் சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது-

குண்டு சரியாக கழுத்தினுள் நீண்டிருக்கும் முதுகெலும்பின் மீது சென்று பொருந்திநின்றுவிட்டது. எலும்பும், சுண்ணும்புச் சத்தும் வளர்ச்சியுறறு அந்த இடத்தை மூடிவிடும். இதனுல் ஆபத்து ஏற்படாது. மீண்டும் அவர் சினிமாவில் நடிக்கமுடியும். குண்டை வெளியில் எடுக்க முயற்சித்தால், ரத்தக் குழாய்கள் அறுபடும். இதனுல் அபாயம் ஏற்படும். பிரான்ஸ் மந்திரி லசால், இருதய தசையிலே குண்டுடன் வெகுகாலம் வாழ்ந்தார். எத்தனையோ ராணுவவீரர்கள் குண்டுடன் உயிர்வாழ்கின்றனர்.

---

சட்டவிரோத

## குடியேற்றக்காரர்களா; கள்ளக்கடத்தல்காரர்களா?

### வல்வெட்டித்துறையில் கைதானவர்கள்மீது புதிய குற்றச்சாட்டு

மாவிட்டபுரம், சனி

சென்ற மாதக் கடைசியில் வல்வெட்டிக் கடற்கரையில் சட்டவிரோதக் குடியேற்றக்காரரென சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்ட வல்வெட்டி வாசிகளெனக் கூறப்படும் 25 நபர்களுக்கும் மற்றெரு சோதனை இப்போது ஏற்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. அதாவது தாங்கள் சட்டவிரோதக்குடியேற்றக்காரர் அல்ல என நிரூபிக்கும் அதே வேளையில் சம்பவதினம் கள்ளக்கடத்தலில் ஈடுபடவில்லையென்றும் நிரூபிக்கவேண்டிய புதிய பொறுப்பு ஒன்று தற்போது அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது-

சென்ற மாதக் கடைசியில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்ததாகக் கூறப்படும் 25 நபர்கள் ஓர் இயந்திரப்படகில் நயினுதீவிற்கு வழிபாட்டிற்காகச் சென்றுவிட்டு அதிகாலையில் வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வந்து இறங்குகையில் இராணுவத்தினர் இவர்களை சட்டவிரோதக் குடியேற்றக்காரர்'எனக் கைதுசெய்து வல்வெட்டித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்க அவர்கள் இவர்களைகாங்கேசன்துறை சட்டவிரோதக்குடியேற்ற தடுப்பு பொலிசாரிடம் ஒப்படைத்தார்கள். இவர்கள் சம்பந்தமாக விசாரணைசெய்த வடமாநில சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்புப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. லயனல் சேனநாயக்கா, 25 நபர்களின் கைவிரல் அடையாளங்களும், அவர்கள் பற்றிய தகவல்களையும் எடுத்தபின்னர் அவர்களைப் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதியளித்து மேல்விசாரணையை ஒத்திவைத்து அடுத்த தவணையில், 25பேர்களையும் தங்களுடைய கூப்பன்புத்தகங்களுடனும், புகைப்படத்துடனும் ஆஜராகும்படி உத்தரவிட்டிருந்தார்.

இப்பொழுது வடபகுதி உதவிச் சுங்கக் கலெக்டர் திரு.பத்திரான விமலதர்மா பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. லயனல் சேனநாயகாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் மேற்படி 25 நபர்களும் சம்பவதினம் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் எனச் சுங்கப்பகுதியினர் சந்தேகிப்பதால்தான் இதுபற்றி விசாரிக்கவேண்டியிருப்பதாகவும் இதனுல் இந்த 25 பேர்களையும் தன் முன்னிலையில் ஆஜர்செய்யும்படியும் கேட்டிருக்கிறுர்.

இந்த 25 பேர்களும் விசாரணைக்காக வெகுவிரைவில் சுங்க அதிகாரி முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

## கலை இலக்கிய பெருமன்றம்

### உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலை இலக்கியப் பெருமன்ற நிர்வாகக் குழு கடந்த வியாழக்கிழமைகூடி தமது உத்தியோகத்தர் தெரிவை நடாத்தியது.

தலைவர் : வி.வரதராஜப் பெருமாள், துணைத்தலைவர்கள் சொக்கன், வி.சி.பரமானந்தம், செயலாளர், டொமினிக்ஜீவா, பொருளாளர்! கே. வி. சிவசுப்பிரமணியம்.

எதிர்வரும்பங்குனித்திங்களில்கலைஇலக்கியப்பெருமன்றத்தின் விழாவை நல்லூரில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடுவதெனவும் அதன் இரண்டாவது விழாவை சித்திரைத்திங்களில் மானிப்பாயில் சிறப்பாக நடத்துவதெனவும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

## பொலிஸார் மீது நீதவான் புகார்

காலி, சனி

காலி கோட்டையைச் சேர்ந்த ஒரு சட்ட மாணவருக்கும் அவரது கார்ச்சாரதிக்கும், தாக்குதல் வழக்கொன்றில் சிறைத் தண்டனை விதித்த காலி நீதவான் திரு. கொலின் ஏ. மெண்டிஸ், வழக்கின் பிரதியைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட சகல பொலிஸ் உத்தியோகத்தர்களது நடத்தைபற்றி விசாரணை நடத்தவே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கில் இன்ஸ்பெக்டர் பி. ஜி. சார்ல்ஸ், சட்ட மாணவர் என்.ஏ.ரகுமான், கார்ச்சாரதி ஏ. டபிள்யூ. எம். ரஸீம், எம். எஸ். என். வியாவதீன் ஆகியோர், காலி துறைமுகக் கூட்டுத்தாபன ஊழியர் ரி. ஜி. பியதாஸாவை ஜனவரி 25, 1965ல் கத்தியால் குத்தியதாகவும், மகிநோன அபயசேகரா, பி. எஸ். சோமதாஸ ஆகியோருக்குக் காயம்விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்திருந்தார்.

நீதவான் முதல் இரு எதிரிகளுக்கும் சிறைத் தண்டனை விதித்து மூன்றும் எதிரியை விடுதலைசெய்தார். கார்ச்சாரதி எம். ரஸீம் 2 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். சட்ட மாணவர் என். ஏ. ரகுமான் 6 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் அப்பீல்மனுத்தாக்கல்செய்துள்ளனர்.

---

## தமிழரசு செயற்குழுகூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 23, 24ந் தேதிகளில் மல்லாகத்தில் நடைபெறவிருந்த தமிழரசுக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் நடைபெறவிருப்பதாகத் தெரிகின்றது. 24ந் தேதி மாலை தமிழரசுக்கட்சிவாலிப முன்னணியின் செயற்குழுக் கூட்டமும் மேற்படி கட்சிக் காரியாலயத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் மாவட்டசபை மசோதா, அடையாள அட்டை ஆகியன பற்றியும் விவாதிக்கப்படலாமென அறியப்படுகின்றது. [ந நி]

---

## பதவிக்காலம் நீடிப்பு?

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர்,கோப்பாய் கிராம சபைகளின் தற்போதைய பதவிக்காலம் மார்ச் மாதத்துடன் முடிவடைகிறபோதிலும் இவைகளின் பதவிக்காலம் மேலும் ஒருவருடகாலத்துக்கு உள்ளூராட்சி அமைச்சரால் நீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேற்படி கிராமசபைகளின் புதிய தேர்தல்களுக்கானநியமனப் பத்திரம்இம்மாதம் 26, 27ந் தேதி தாக்கல்செய்யப்படுமெனஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. [ந நி]

---

## சிரமதானத்தில் மாணவர்உற்சாகம்

பலாலி, சனி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக்கல்லூரியில் இன்று சிரமதானம் நடைபெற்றது. இதில் 400க்கு மேற்பட்ட மாணவர்கள் ஈடுபட்டனர். கல்லூரிக்காணியில் ஓர் உதைபந்தாட்ட மைதானத்துக்குரிய இட[illegible]

## ஆரியகுளம் மூடப்படலாம்

### வீடமைப்புத் திட்டத்தை உருவாக்க ஜி. ஜி. முயற்சி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தை மூடி விரைவில் அதில் வீடமைப்புத் திட்டத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கொள்ளவிருக்கிறுர். இது சம்பந்தமாக யாழ். மாநகர சபை விசேஷ ஆணையாளர்களுடன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறுர்.

ஆரியகுளத்தினுல் பொதுமக்கள் எவ்வித நன்மையையும் பெருமலிருப்பதாகவும் முக்கியமாக மழைகாலங்களில் இக்குளம் நிரம்பி வழிவதனுல் அருகாமையில் குடியிருக்கும் மக்களே அவ்விடங்களை விட்டு எழுந்து செல்லவேண்டி யிருப்பதாகவும், இக்குளத்தை மூடிவிட்டு இதில் சுமார் 100 வீடுகளைக் கொண்ட குடியேற்றத் திட்டமொன்றை அமைத்தால், வீடில்லாது தவிக்கும் மக்களுக்கு நன்மை பயப்பதாகவிருக்குமென்றும் ஆரியகுளம் சனசமூகநிலைய உறுப்பினர்கள் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை சந்தித்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவர் இவ் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறுர்.

---

## ஆசிரிய ஆலோசகர் தராதரபத்திர பரீட்சைமுடிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சென்ற வருடம் அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற ஆசிரிய ஆலோசகர் தராதரப் பத்திரப் பரீட்சை [தமிழ்மொழி மூலம்] முடிவுகள் வருமாறு-

பரீட்சை ஸ்தானம்-கொழும்பு எம். ஆதம் லெப்பை [மீராவோடை], மு. இ. மு. இஸ்மாயில் [நிந்தாவூர்] எம். எம். இஸ்மாயில் [கல்முனை], எஸ். ஏ. எஸ். ஐ. மௌலானு [கல்முனை], பொ.பாக்கியராஜா [காரைதீவு], க. பற்குணம் [பம்பலப்பிட்டி], பு. இராசதுரை [கல்முனை], இ. மு. ருசிக் [மருதமுனை], சி. சரவணமுத்து [களுவாஞ்சிக்குடி].

பரீட்சை ஸ்தானம் யாழ்ப்பாணம்- க. கந்தையா [குட்டியபுலம்], வே. க. கந்தசாமி [கொட்டடி], க. நாகேஸ்வரன் [நயினுதீவு], ந. பழனிச்சாமி [கொட்டடி], மு. பத்மநாதன் [சித்தங்கேணி], ச. இராசையா [யாழ்ப்பாணம்], க. சிற்றம்பலம் [கொட்டடி] ச. சிவப்பிரகாசம் [மண்டைதீவு], சி. எஸ். சுப்பிரமணியம் [தெல்லிப்பளை], ஆர். ஏ. காதர் [யாழ்ப்பாணம்], இ. பாக்கியம் [கோப்பாய்], வ. தனபாலசிங்கம் [கீரிமலை], எஸ். யோகம்மா [நாயன்மார்க்கட்டு], வை. ஜெ. ஜெயராஜசிங்கம் [வல்வெட்டித்துறை], இ.கணபதிப்பிள்ளை [இளவாலை], க. பரமகுரு [வல்வெட்டித்துறை.]

பரீட்சை ஸ்தானம்-கண்டி எஸ். சந்தியாப்பிள்ளை [மட்டக்களப்பு], க. அரசரத்தினம் [பதுளை.]

பரீட்சை ஸ்தானம்- குருநாகல் ஏ. எம்.அபூபக்கர் [மருதமுனை.]

---

## ‘காஞ்சீபுரம், பெனுரிஸை விட்டு கட்டுவன், பன்னுலையை அணியுங்கள்’

### நெசவு நிலையத் திறப்பு விழாவில் காரியாதிகாரி

மாவிட்டபுரம், சனி

‘‘கைத்தொழிலும், கமத்தொழிலும் இருகண்களைப் போன்றவை. பெண்கள் கைத்தொழிலிலும், ஆண்கள் விவசாயத்திலும் அக்கறைகாட்டுவது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குமாத்திரமல்லாதுதனித்தனி குடும்பங்களின் முன்னேற்றத்திற்கும் உதவியாகவிருக்கும்.’’

இவ்வாறு வலி - வடக்குக் காரியாதிகாரி திரு. முருகேசபிள்ளை தெல்லிப்பழை தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அதரவில் ஆரம்பிக்கப்பட்ட புதிய நெசவு நிலையத்தைத்திறந்து வைத்துப்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர். திரு. சு. மாணிக்கம் தலைமைவகித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது -

நெசவு நிலையங்களில் பெண்கள் நல்ல தரமான ஜவுளிகளை உற்பத்திசெய்து அதன்மூலம் தங்களுக்குப் போதிய வருமானத்தைப் பெறுவதோடு பிறநாட்டுச் செலாவணியையும் குறைக்க உதவலாம். காஞ்சிபுரம், பெனுரிஸ், மைசூர்பட்டுக்கள் என்ற பைத்தியம் கொள்ளாமல், பன்னுலை, நீர்வேலி, மானிப்பாய், கட்டுவன் பட்டுக்களைத் தேடிபெற்று பெருமையுடன் அணிய தமிழ்ப் பெண்கள் பழகவேண்டும்.

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சங்கச்சமாஜத்தின் தலைவர் திரு. சு. [illegible]வாணர் உரை நிகழ்த்தினுர்.

## இவர்களுக்கு பணமில்லை

புன்னுலைக்கட்டுவன், சனி

கடந்த ஆவணி மாதம் நடைபெற்ற க.பொ.த. ப. சாதாரணம் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தியவர்களுக்கு இன்னும் கல்வி இலாகா பணம் கொடுக்கவில்லையாம். இவர்கள் உரிய காலத்தில் தங்கள்வேலையை முடித்துஒப்படைக்கத்தவறியமையே காரணமென்றும் தெரிகிறது. இவ்வாண்டும் விடைத்தாள்கள் திருத்துபவர்கள்குறிப்பிட்ட திகதிக்குள் தமதுகடமையைப் பூர்த்திசெய்யத் தவறினுல் பணம்கொடுக்கப்படமாட்டாதெனப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

---

## மருத்துவத்தாதி இன்றிக்கஷ்டம்

அச்சுவேலி, சனி

அச்சுவேலிப்பகுதியில் பல மாதங்களாக ஊர்மருத்துவதாதியின் சேவை இல்லாத்தால். இப்பகுதிப் பெண்கள் பெரிதும் கஷ்டப்படுகிறுர்கள்.

கடந்த பல மாதங்களுக்கு முன் சேவையிலிருந்தபெண் இடமாற்றம் செய்யப்பட்டதே இதற்குக் காரணம். இது சம்பந்தமாக பத்தைமேனி இளைஞர் கழகத்தினர் கோப்பாய் எம். பி. யிடம் புகார் செய்துள்ளாரென அறியக்கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்

மானிப்பாயில் திரு. க. ஆறுமுகம் உங்கள் தேவைகளை பதிவுசெய்வார். விலாசம்:- க. ஆறுமுகம் மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 2332

வரகு

60 புசல் வரகு விற்பனைக்குண்டு. விலை நிதானம். அருணா ஏஜென்ஸீஸ், அளவெட்டி. 1528

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30, 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
MARVEL MAN
[ஹிந்தி]

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
BIKINI BEACH
Techniscope - Pathecolour

REGAL - JAFFNA
NOW SHOWING
Marilyn Monroe
in
MARILYN


## ஆங்கிலஆசிரியர் இன்னும் இல்லை

அச்சுவேலி, சனி

பத்தைமேனிஇரத்தினேசுவரி வித்தியாசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிய திரு.ந. சிவபாதம் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்குப் பயிற்சிபெறச்சென்றுள்ளார். அவருடைய இடத்துக்கு இன்னும் ஓர் ஆசிரியரும் நியமிக்கப்படவில்லை.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### ஞாயிறு 19 - 2 - 67

செய்திகள்; காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 எங்கள்விருப்பம்.

இரவு 6-15 குரல்வகை, 6-30 நேயர்கடிதங்கள், 6-45 கத்தோலிக்க ஆராதனை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 மாதர் கேட்டவை.


நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - பானுமதி
நடித்த
மக்களைப் பெற்ற
மகராசி

நவா
கொம்பனித்தெரு
இங்ஸ்லி — கொழும்பு | பிளாஸா — வெள்ளவத்தை | வெலிங்டன் — யாழ்ப்பாணம்
2வது வெற்றி வாரம்!
விஜயா — மட்டக்களப்பு | ஸ்ரீ கிருஷ்ணா — திருமலை | விஜிதா — ஹட்டன்
அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை
கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட
அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்
காக்கும் கரங்கள்

கடைசி வாரம்!
கெப்பிட்டல் — கொழும்பு | மொடேர்ன் — பண்டாரவளை
எம். ஜி. ஆர்., ரத்னா,
கே. ஆர். விஜயா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்
தொழிலாளி


சாவகச்சேரி

## வடக்கு தமிழரசு வாலிப முன்னணி

மீசாலை, சனி

சாவகச்சேரி வடக்குத் தமிழரசு வாலிபமுன்னணியின் நிர்வாகசபைக்கூட்டம் திரு. கு. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின்பொது, சாவகச்சேரி மக்கள் நல்ல குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுவதை நிவர்த்தி செய்வதற்காகக் குழாய் மூலம் வேம்பராய், மண்டுவில் ஆகிய இடங்களிலிருந்து நல்ல தண்ணீர் விநியோகிக்கும் திட்டம் பற்றி மீண்டும் உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கும், தொகுதி எம். பி. மற்றும் சம்பந்தப்பட்டவர்க்கும் ஒரு மகஜரை அனுப்பிவைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## பரீட்சை பெறுபேறு இன்னும் வரவில்லை

பருத்தித்துறை, ஞாயிறு

1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற உள்ளூர் ஆட்சி லிகிதர் பரீட்சையின் பெறுபேறுகளின் பகுதி 'சி' இதுவரை காலமும் வெளிவரவில்லை. அதற்குப் பின்பு வேறு பகுதிகளுக்குப் பரீட்சை நடைபெற்றது. அதன் பெறுபேறுகளும் வெளியாகிவிட்டன. இதனால் இப்பரீட்சைக்குத் தோன்றிய பல மாணவர்கள் பெறுபேறுகளை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து கொண்டு இருக்கின்றனர். பருத்தித்துறை பரீட்சார்த்திகள் சிலர் உள்ளூராட்சி அமைச்சருக்கும், பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினருக்கும் முறையிட்டுள்ளனர்.

## வித்தியாதிபதி பார்வையிட்டார்

உடுவில், சனி

வடபகுதி வித்தியாதிபதி திருமதி நவரத்தினம் அண்மையில் யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பப் பாடசாலைக்கு உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொண்டார். கல்லூரிகளில் காணப்படும் வசதியீனங்களையும் குறைகளையும் கண்டு அவற்றை விரைவில் தவிர்ப்பதற்கு தாம் ஆவனசெய்வதாக உறுதியளித்தார். மாணவர்கள் கூட்டுறவு முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென்றும் இவற்றைத் திறம்பட நிர்வகிக்கும் அதிபர் திரு. க. நாகலிங்கம் பாராட்டப்படவேண்டியவரென்றும் வித்தியாதிபதி கூறினர்.

## "பஸ் தரிப்பு நிலையம் வேண்டும்"

உடுவில், சனி

"சுன்னாகத்திலிருந்து சங்கானைக்கு கந்தரோடையூடாகச் செல்லும் வீதியில் பஸ் தரிப்பு நிலையம் இல்லாத காரணத்தால் பொது மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். பஸ் சாரதிகள் கூட பஸ்ஸை எங்கெங்கே நிறுத்துவது என்ற நிதானமில்லாமையால் எல்லா இடத்திலும் நிறுத்தவேண்டிய கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர். உடனடியாக பஸ் தரிப்பு நிலையங்களை இவ்வீதியில் அமைத்துக் கொடுத்து பொதுமக்களதும், பஸ் சாரதிகளினதும் இக்கஷ்டத்தை நீக்க பட்டினசபை முன்வரவேண்டும்".

மேற்படி கூறும் தீர்மானம் ஒன்று கந்தரோடை சனசமூக நிலையத்தின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு சுன்ன[illegible]

## "தமிழ்க் காங்கிரஸுக்கு கிடைத்த வெற்றி"

### சுகாதார சேவையாளர் விழாவில் உடுப்பிட்டி எம். பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

"1960ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களமும், சிங்கள அரசாங்க ஊழியர்கள் தமிழும் கற்க வேண்டுமெனக் கூறியதை தமிழ் எம். பிக்கள் எவருமே மறந்திருக்க மாட்டார்கள். ஆனல் அதே ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பில் உருவான தேசிய அரசாங்கத்தில் எமது காங்கிரஸ் கட்சி சுகாதாரசேவை சிறுசேவையாளர்களுக்கு சிங்களம் அவசியமில்லை எனப் போராடி வெற்றிபெறவேண்டிய நிலைமைஏற்பட்டது. இதற்குக் காரணம் தமிழ் எம். பிக்களின் ஒற்றுமையின்மையே"

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் தேசிய அரசாங்க சுகாதாரசேவைத்தொழிலாளர்சங்கத்தின் ஆதரவில் யாழ். திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற விசேஷ வைபவமொன்றில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வ. பண்டிதர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. மு. சிவசிதம்பரம் மேலும்பேசுகையில் நாட்டில் ஏற்பட்ட உணவுநெருக்கடியை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் பஞ்சப்படியான 17ரூபா50சதத்தை 30ரூபாவாக உயர்த்துவதுசம்பந்தமாக தாம் விரைவில் நிதிமந்திரியுடன்பேச்சுவார்த்தைகளை நடாத்துவதாகத் தெரிவித்தார்.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"1960ம் ஆண்டுமொழி சம அந்தஸ்துகோரி ஐக்கிய தேசியகட்சி ஆட்சிக்குவந்த போது அதை ஆதரிக்காத தமிழரசுக்கட்சியினர் பின்னர் 1965ம் ஆண்டுத் தேர்தலில் எதற்காக அந்தக்கட்சியை ஆதரித்தார்கள்?

1948ம் ஆண்டில் இந்திய வம்சாவழிமசோதாவில் திரு. பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்களை நீங்கள் அண்மையில் உணர்ந்துகொள்ள முடியும். அரசாங்க சேவையாளர்களுக்கான சம்பளநிர்ணயக்குழுவில் அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் தமிழ் மந்திரிகூட அவர் சுகாதார சிறு சேவையாளர் சம்பள உயர்வுபற்றி பேசாது இருந்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் எம்.பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில்400)க்கும்மேற்பட்ட சிங்கள தமிழ் முஸ்லிம் அரசாங்க சுகாதார சேவையாளர்களைக்கொண்ட ஒரு சங்கத்துக்கு தமிழரான திரு. எஸ். ஆர். அருமைநாயகம் பொருளாளராக இருப்பது தமிழினத்துக்கே பெருமையானதென்றும் தங்கள் சங்கங்களின் உரிமைகளைப்பெற எல்லாச்சங்கங்களும் ஒருசம்மேளனத்தின்கீழ் ஒன்று சேருவதே அவர்களுக்குப் பலத்தை கொடுக்குமென்றும் தெரிவித்தார்.

திருவாளர்கள் எஸ். ஆர். அருமைநாயகம். சுப்பிரமணியம், பி. தேவராசா, வேலுப்பிள்ளை ஆகியோர் உட்பட பலர் பேசினர்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [ந, நி.]

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

னைப் பட்டனைச்செல்வ ஆரூரானை மறக்கலுமாமே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

[என்னை வழக்கிட்டு ஆட்கொண்டு அதன்பின் கோயிலுள் சென்று மறைந்த நண்பகற்போது போலும் ஒளியை உடையவனும், நஞ்சையுடைய பாம்பைக் கட்டியுள்ள உடையை உடையவனும், பகலாயும் இரவாயும் உள்ளவனும், தன்னை நினைப்பவரது உள்ளமாகிற தாமரையில் ஊறுகின்ற தேனாய் உள்ளவனும், கரும்பின் சாறும் அதன் கட்டியும் போல்பவனும், தேவர்மீது வைத்த அன்பினால், கடலில் மாமரமாய் நின்ற சூரனை அழித்த முருகனுக்குத் தந்தையும், வேதத்தில் வல்லவனும் ஆகிய செல்வத்தை யுடைய திருவாரூர் இறைவனை யான் மறத்தலும் ஆகுமோ.]

## இந்திய...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

"நான் உங்களுக்குச் சம்பிரதாய முறைப்படி நல்லதே கிட்டவேண்டுமென ஆசிகூற முடியாது. சொந்த மகிழ்ச்சி, வசதி, ஓய்வு, செல்வம் மற்றும் சாதாரண மனிதரிடையே காணப்படும் வழக்கமான தனங்கள் உங்கள் வாழ்க்கையில் அதிக இடம் பெறு எனவே நான் எண்ணுகிறேன். கவலை, கஷ்டம், வேதனை, தியாகம், போராட்டம் ஆகியனவே உங்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட நன்கொடைகளாகும். அவற்றை ஏதோவொரு வழியில் நீங்கள் பேரானந்தம், வெற்றி, சுதந்திரம் ஆகியவற்றின் சாராம்சச் சத்தாக மாற்றிவிடுவீர்கள். ஜனக் கூட்டத்தினிடையே தனியாக நிற்கவும், ஆழமான அன்புடன் நேசிக்கப்பட்டாலும், வெகு குறைவாகவே விளங்கப்படவும் பிறந்துள்ள, விதியின் தலைமகன் நீங்கள்."

இந்தியாவின் தேசிய விடுதலைக்கவி, தந்தையைப்பற்றி எழுதியிருப்பது, சரித்திரத்தின் எக்கட்டத்திலும் எந்தவொரு அரசியற் தலைவராலும் கையாளப்படக்கூடிய மிகக்கஷ்டமான பிரச்னைகளிலும், நிலைமைகளிலும் ஒன்றைப் பயமின்றித் தற்போது கையாண்டுவரும் இந்தியாவின் புனிதப் பிரதமரானமகளுக்கும்பொருத்தமானதே.

தேர்தலில் பங்குபற்றும் கட்சிகளின் வெற்றிதோல்வி எப்படி அமைந்தாலும், இந்தத் தேர்தலின் இறுதியில், தேர்தல் முடிவுகளின் பயனாக, இன்னும் அதிக ஜனநாயகப் பண்புடனும், தூய்மையும், பலத்துடனும் ஓர் இந்தியா வெளிவருமென்றே பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது, இவ்வித இந்தியா உருவாகுவது, அதன் ஞானியும், ராஷ்டிரபதியுமான டாக்டர் ராதாகிருஷ்ணனின் விருப்பமும், அதன் சரித்திரத்தில் அதன் தலைவர்களின் புனிதமான நோக்கமுமாக விளங்கிவந்துள்ள புதிய, சிறந்த, நல்லுலகொன்றைச் சிருஷ்டிப்பதில், இந்தியாவுக்கு மேலும் பயனுள்ள சக்தியையும் அளிக்கும். இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புடைய இலங்கையும் இதனால் நன்மைபெற முடியும்.

## சிங்களவகுப்புகள்

துணுக்காய், சனி

துணுக்காய்ப் பகுதியில் கடமையாற்றும் அரசாங்க ஊழியருக்கு சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனியா செய்திகள்

— நமது நிருபர் —

வவனியா, சனி

வவனியாவில் கூட்டுறவு மீன் விற்பனைநிலையமொன்று விரைவில் திறக்கப்படவிருக்கிறது. இதற்குரிய பணத்தை வவனியா குடியிருப்பு ப. நோ. கூட்டுறவுச்சங்கம் ஒதுக்கியுள்ளது.

வவனியா குடியிருப்பில் உள்ள ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கக் கட்டிடத்தில் தலைவர் தலைமையில் நடைபெற்றது. உறுப்பினர் திரு. ஆர். வி. வில்வராஜா வவனியாவில் கூட்டுறவு மீன் விற்பனை நிலையமொன்று திறக்கப்படவேண்டும் என்று கொண்டுவந்த பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் அதற்கு வேண்டியபணமும் ஒதுக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## உப உணவுச் செய்கை

வவனியா, மன்னார்மாவட்டங்களில் உள்ள வீட்டுத் தோட்டங்களில் மிளகாய் மற்றும் கிழங்குவகை உற்பத்திசெய்யவேண்டும் என்றும், அதைப்பிரதான இலக்காகக் கவனிக்கவேண்டுமென்றும் வவனியா சுகாதார அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சுகாதார அத்தியட்சகர் சகல சுகாதார பரிசோதகர்களையும் கேட்டுக்கொண்டார்.

சுகாதாரப் பரிசோதகர்கள் வீட்டுக்குவீடு சென்று பொதுமக்களுக்கு நாட்டின் நன்மையை விளக்கி ஊக்குவிக்கவேண்டுமென்றும் வீட்டுத்தோட்டங்களில் மிளகாய், கிழங்குவகை உற்பத்தி செய்விக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## இடமாற்றம்

வவனியா நகரசபை அலுவலகத்தில் பிரதம லிகிதராகக்கடமையாற்றிய திரு. சபாரத்தினம் நாவலப்பிட்டான் பட்டினசபைக்கு காரியதரிசியாக உத்தியோக உயர்வு பெற்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இ. போ. ச. வில் கண்டக்டராகக் கடமையாற்றிய திரு. என். ஏரம்பமூர்த்தி தலைமன்னார் கிராம சபைக்கு லிகிதராக நியமனம் பெற்றுள்ளார்.

வவனியாவில் மேலதிக அரசாங்க அதிபராக இம்மாதம்முதல் கடமையாற்றிய திரு. சாமுவேல் தம்பையா அடுத்த மாதம் தொடக்கம் பொலனறுவைக் கச்சேரிக்கு மேலதிக அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

## ஆஸ்பத்திரி வளவில் பயிர்ச்செய்கை

வவனியா அரசாங்க ஆஸ்பத்தி வளவில் கத்தரி, மிளகாய் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. வவனியா ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்க வருபவர்கள் தோட்டத்தை வலம்வந்து செல்வதற்கு ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

## திருடர் கைவரிசை

வவனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் காரியாதிகாரியின் காரியாலயத்தில் திருடர்கள் கைவரிசையைக் காட்டியதாக புகார் செய்யப்பட்டுள்ளது. இக்காரியாலயத்துக்குக் காவலாளியை நியமிக்குமாறு வவனியா அரசாங்க அதிபர் பலதடவைகள் அறிவித்தும் எவரும் நியமிக்கப்படவில்லை.

இக்காரியாலயத்தில் பல தஸ்தாவேஜுகள், பொது மக்களின் பங்கீட்டரிசிப் புத்தகங்கள் ஆகியவை களவு போய்விட்டதாகத் தெரிய வருகிறது. வவனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. சாமுவேல் தம்பையா ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

## விவசாயிகளுக்கு கோரிக்கை

''இலங்கையில் திறமையானமுறையில் விவசாயம் செய்யக்கூடியநிலம் வவனியாவில் இருந்தும் சிலசங்கங்கள் இதனைப் பயன்படுத்தாதது கவலையளிக்கிறது. சில விவசாயிகள் தங்களின் பழைய கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றனர். இலங்கையின் தற்போதைய நெருக்கடியான நிலையை அறிந்து நாட்டின் நெல்உற்பத்தியை அதிகரிக்க முன்வரவேண்டும். இதற்கு சகல உதவிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்படும்'' என்று வவனியா தெற்குதமிழ்பிரிவு விவசாய போதனாசிரியர் திரு. கே. வி. சீவரத்தினம் குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது உரையாற்றுகையில் கூறினார். திரு. குலசேகரம், திரு. எஸ். பி. வவுனியன், திரு. எஸ். எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினார்கள்.

# 'பலே சுகன்யா!'

'யாழ்ப்பாணத்தில் நடந்த 'பலே' என்னும் நாட்டிய நாடகங்களிலே 'சுகன்யா' மிகவும் சிறப்புவாய்ந்தது. இதை கொழும்புக்கு மட்டுமின்றி, சென்னை, லண்டன், நியுயோர்க்குக்குக்கூட வெற்றிகரமாகக்கொண்டு செல்லலாம்' இவ்வாறு நேற்றிரவு யாழ்ப்பாண நகரமண்டபத்தில், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்நடித்த 'சுகன்யா நாட்டிய நாடகத்தைப் பாராட்டிப் பேசுகையில் கலையரசு சொர்ணலிங்கம் பலத்த கரகோஷங்களுக்கிடையே குறிப்பிட்டார்.

நகரமண்டபம் புதிய அபிவிருத்திகள் செய்யப்பட்டு புதிய பொலிவுடன் விளங்கியது. மண்டபம் நிறையக் கூடியிருந்த மக்கள், காட்சிக்குக்காட்சி கரகோஷம் செய்து பாராட்டினர். கல்லூரித் தலைவர் செல்வி தம்பையா, முதலில் பேசுகையில். நாட்டிய நாடகத்துக்கு ஒழுங்குசெய்வதில் உள்ளகஷ்டத்தைச் சொல்லி இது வெற்றிகரமாக நடத்துவதற்குச் சம்பந்தப்பட்ட எல்லா மாணவிகளும் ஆசிரியைகளும் காரணமென்றும் கூறினார்

சிறப்பாக நாடகத்தைத் தயாரித்து நடத்திய செல்வி ஞானு சிவசுப்பிரமணியத்தையும், அவருக்கு உதவியாகவிருந்த ஸ்ரீமதி பத்மநாதனையும், கலைஞர் சுப்பையாவையும் பாராட்டினார். சுகன்யாவாக வந்த மாணவியின் நடிப்பும் முகபாகமும் முதல்தரம்.

உடை, காட்சி, பின்னணி நடிப்பு, ஒளி எல்லாம் உயர்ந்த முறையில். அழகாக யாழ்ப்பாணம் பெருமைகொள்ளும்வகையில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

—சித்ரா

## எந்தக் கட்சிக்கும ......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் என்றும் அண்ணாதுரை முதல் மந்திரியாவாரென்றும், வாக்குறுதியளித்தபடி அரிசி விலையைக் குறைப்போம் என்றும் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

### வேட்பாளர் கைது

நெல்லிக்குப்பத்தில்நேற்று காங்கிரஸாருக்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் நடந்த கலவரத்தைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் வேட்பாளர் கோவிந்தராஜனை பொலிஸார் கைது செய்துள்ளனர். மற்றும் 15 கம்யூனிஸ்டுகளை, 5. தி. மு. கழகத்தினரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இங்கு தெருக்களில் பொலிஸார் பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டுள்ளது. அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டு 3 ரூபாய்க்கு 1 படி அரிசி விற்கும் நேரத்தில் காஞ்சிபுரத்தில் அரிசியை அதிக விலைக்கு விற்ற குற்றத்திற்காக துரைசாமி செட்டியார் என்பவருக்கு 300 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இவர் அரிசியை தமது மில்லில் பதுக்கிவைத்து அதிக விலைக்கு விற்று வந்தார். பொலிஸாருக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்து இரகசிய பொலிஸார் சோதனை நடத்தி மோசடியைக் கண்டுபிடித்தனர்.

விருதுநகர் தொகுதியில் 15,000 வோட்டு வித்தியாசத்தில் ஜெயிப்பேன் என்று காமராஜர் கூறினார். காங்கிரஸ் இம்முறை அதிக மெஜோரிட்டியுடன் வெற்றி பெறும் என்றும் அவர் கூறினார். இத்தொகுதியில் தி. மு. கழக அபேட்சகருக்காக 500 மாணவர்கள் நேற்று பிரசாரம்செய்தனர். சினிமா நடிகர்களான கண்ணன், ஆனந்தன். ராமராவ் ஆகியோரும் மாணவர்களுடன் சேர்ந்து பிரசாரம் செய்தனர். காமராஜர் வெற்றி பெறுவதென்றால், குறைந்த மெஜோரிட்டியினால் தான் வெற்றிபெறுவார் என்று இங்கு பேசிக்கொள்கின்றனர்.

# கணவனில்லாத சமயம் கத்திமுனையில் கொள்ளை

## மூவர் கைது

கிளிநொச்சி, சனி

கணவனில்லாதபோது தனித்திருந்த பெண்ணைக் கத்திமுனையால் பயமுறுத்தி எண்ணூறு ரூபாய் பெறுமதியான நகைகளை கொள்ளைக் கோஷ்டி ஒன்று அபகரித்ததாம். கிளிநொச்சி நான்காம் வாய்க்காலில் வசிக்கும் ஒரு பெண் இப்படியான புகார் ஒன்றை கிளிநொச்சி பொலிஸில் செய்தார்.

உயிருக்குப் பயந்து தனது நகைகளை அவர்களிடம் கழற்றிக் கொடுத்துவிட்டதாக அப்பெண்மணி தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக கிளிநொச்சி பொலிஸ் சார்ஜண்ட் திரு. வி. எஸ். நடராசா மூவரைக் கைது செய்துள்ளார். அபகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் நகைகள் எதுவும் பொலிசார் கையில் சிக்கவில்லை. அபகரிக்கப்பட்ட நகைகள் கடையொன்றில் விற்கப்பட்டுவிட்டதாக பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிசார் இதனைக் கண்டெடுப்பதில் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

# நாவலப்பிட்டி செய்திக்கடிதம்

— நமது நிருபர் பி. மகாலிங்கம் —

## இ. தொ. கா. நடவடிக்கை

கண்டிக்கருகாமையிலுள்ள பல்லக்கலை தோட்ட நிர்வாகம், அதன் விக்டோரியா டிவிஷனை விற்பனை செய்து, தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கியிருப்பது சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கண்டி மாவட்டம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## பெண் மரணம்

மருந்தெடுக்க ஆஸ்பத்திரி சென்ற பெண் ''கியூ'' வரிசையில் நின்றபோது விழுந்து மரணமானார். நாவலப்பிட்டி மாவினைத் தோட்டத்தைச் சேர்ந்த எக்னஸ் என்ற பெண் [வயது 35] நாவலப்பிட்டி அரசாங்க ஆஸ்பத்திரியில் மருந்து வாங்க வந்தார். மருந்து எடுக்க 'கியூ'வில் நின்ற அப்பெண் சுருண்டு கீழே விழுந்தார். டாக்டர் உடனே அவரை சோதித்தாராயினும், அவர் அவ்விடத்திலேயே எவ்வித பரிகாரமும் பெறமுன் இறந்தார்.

## மஹோற்சவம்

மேரிவலே மேற்பிரிவு தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மஹோற்சவம் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 5 தினங்கள் விமரிசையாக நடைபெறும். இவ்விழாவில் நாடகமும் இடம்பெறும்.

## லொறிச்சாரதி மரணம

லொறி பள்ளத்தில் பாய்ந்ததால் சாரதி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். அதில் பிரயாணம்செய்த மூவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நாவலப்பிட்டி கந்தலோயா தோட்டத்திற்குச் சாமான் ஏற்றிச் சென்று திரும்பிய லொறியொன்று சீபொத் கொலனிக்கருகில் 180 அடி பள்ளத்தில் பாய்ந்ததால் 9 பிள்ளைகளின் தந்தையான ரெங்கசாமி கோபால் [வயது 55] என்ற சாரதி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இதில் பிரயாணம்செய்த கறுப்பையா. அப்பு சிங்கோ, ஜேன்நோனு ஆகிய மூவரும் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கண்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## நிகழ்ச்சிகள்ஒலிப்பதிவு

இம்மாதம் 22ந் தேதி புதன்கிழமை முதல் 25ந் தேதி வெள்ளிக்கிழமை வரை நாவலப்பிட்டி நகரசபை மண்டபத்தில் 'குதூகலம் வளர்கலை அரங்க' நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு செய்யப்படும். இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் நேயர்கள் இம்மாதம் 18ந் தேதிக்கு முன்னதாக ஆத்மஜோதி நிலையத்தாருடன் தொடர்பு கொள்ளலாம். வியாழக்கிழமை தேசிய லொத்தர் சபையின் 130ம் இலக்கச் சீட்டிழுப்பு நாவலப்பிட்டி ஜெயதிலகா திடலில் நடைபெறும்.

## மந்திரிக்கு மகஜர்

தொழிலாளர்கள் தோட்டம் மாறும்போது அவர்களின் சேமலாபநிதி மாற்றம்செய்யப்படும்போது, அவர்களது இலக்கங்கள் மாறுகின்றன. பழையகணக்குகள் புதிய இலக்கங்களுடன் சேர்க்கப்படுவதில்லை. இதுபற்றி விளக்கம் கோரியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று ல. தோ. தொ. யூனியன் நாவலப்பிட்டி மாவட்டப்பிரதி திரு. யூ. நவரட்ண மகஜர் ஒன்றைத் தொழில் அமைச்சர், தொழில்இலாகா அதிகாரி ஆகியோருக்கு அனுப்பியுள்ளார்.

## சதிவழக்கு.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக முடிக்குரிய தரப்பில் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் மூன்று எதிரிகளையும் விடுதலை செய்திருந்தார்.

## 22பேர்மீது விசாரணை

சதிவழக்கில் குற்றம்சாட்டப்பட்ட இருபத்தெட்டு எதிரிகளில் ஆறுபேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 22 எதிரிகள்மீது தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# 'தொழிலாளர்களை எதிர்க்கவில்லை'

## ஜி. ஜி. பேச்சு

யாழ்ப்பாணம், சனி

''இதுவரை காலமும் இடதுசாரிக் கட்சித் தலைவர்களின் கீழ் பொதுமக்களும், தொழிலாளர் சங்கங்களும் நடாத்தப்பட்டு வந்தபோது நான் எதிர்ந்து வந்தது தொழிலாளர்களை அல்ல, அவர்களை வழிநடத்திச் செற தலைவர்களைய. தற்போதைய காலத்தேமாத்திரம் எண்ணி நடக்காது எதிர்காலத்தையும் சிந்தித்தே தொழிற்சங்கத் தலைவர்கள் நடக்க வேண்டும் தொழிலாளர்கள் சங்கங்களுக்காக தம்மை வலர்க்கும் நோக்கத்துடன் அரசியல் கட்சித் தலைவர்கள் நடந்து கொள்ளக் கூடாது.''

மேற்கண்டவாறு நேற்று மாலை தேசிய அரசாங்க சுகாதாரசேவையாளர் சங்கத்தால் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் கொண்டாடப்பட்ட விசேஷ விழாவில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் இலங்கை இந்தியர் மசோதாபற்றி இம்மாதம் 21-ம் திகதி தான் பாராளுமன்றத்தில் விளக்கமாகப் பேசப் போவதாகவும் அதன் முன்இதுபற்றித்தான் எதையும் குறிப்பிட விரும்பவில்லை எனவும் தெரிவித்தார். திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், எம். பி. தா. சிவசிதம்பரம் [illegible] பேசினார்கள்.

[ந. நி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org